தி

ஓம்

சிவமயம்

திருத்தணிகை ஸ்ரீ சிவசுப்பிரமணியப் பெருமான்

சுகுண சிவரத்னமணி

# உயிர் வருக்கப் பாமாலை



திருவொற்றியூர் புதுவை ஆ. வைரககன் என வழங்கும்

அருணாசலமவர்களால் இயற்றி

வைத்தியமணி ச. மு. கணேச பாரதியாரால்

பார்வையிடப்பெற்று

ஸ்ரீமான் ஜோதிட ரத்னாகரம் தே. மெய்ஞ்ஞான நாயனார்

அவர்களின் பேருபகாரத்தையும் நன்முயற்சியையும் கொண்டு

இப்புத்தகத்தை

சென்னை [illegible] அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

28 - 8 - 39

மறைமலையடிகள் நூல் நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1

# முகவுரை

---

ஓமெனும் பொருள் உமாசகாயனுக்கு உணர்த்திய உமை முருகப்பெருமான் இந்திராதி தேவர்களுக்குச் சூராதிகளால் ஏற்பட்ட இடுக்கணைப் போக்குவான் தனிவேல் கொண்டு சூராதிகளைக் கொன்று புரந்தராதி புத்தேளிர் யாவருக்கும் திருவும் இன்பமும் நல்கி வானுதவும் தெய்வக்களிற்றை மணம்புரிந்து. காம முனிந்த கலைமுனிவன் கண்ணருளால் வாழ்மடமானின் வயிற்றுதித்து ஏனற் புனங்காத்துத் தெள்ளித் தினைமாவுந் தேனுமளித்த வள்ளிக்கொடியைப் புணர்ந்து உள்ளமுவந்து, தடஞ்சாரலருவி பாய் பரங்கிரியும், சதுமறை பரவுஞ் செந்திலாம் சீரலைவாயும் மென்போது கமழ்சோலைசூழ் திருவாவினன்குடியும் அதிசய மனேகமுற்ற வழகு திருவேரகமும் குறந்தரு கொடிச்சியர் பெருங் குரவை முறைகுலவு குன்றுதோறாடலும் கொண்மூ முழங்குவது கண்டு இனமெனக் கடகுஞ்சரம் பிளிறுமாவஞ் சிறந்த பழமுதிர் சோலையும் புரந்ததுபோல், காமனைவென்ற மெய்த்தவர்வாழ் திருத்தணிகையாம் ஓங்கல்மிசையும் விரும்பி எழுந்தருளிப் பிள்ளைமையணி அத்தலத்துப் பெருமான்மீது அன்புநிறை சிந்தையுறு வைரக்கண் எனும் அருணாசலப் பேர் அறிஞன் ஆக்கிய சுகுண சிவாதனமணி உயிர்வருக்கப் பாமாலையை முறைப்பட முதலிருந்து பயிலவோருக்கு அறுமுகவன் இகபரசுகங்களையளித்து இன்பவீட்டருளுவன் என்பது திண்ணம்.

அன்பர்களனைவரும் இந்நூலைப் பின்பற்றி அகமகிழ்ந்தோதி இவனருளடைவாராக.

76150

செங்கல்வராயன் பங்கயபாதம்

கங்குலும்பகலும் தாங்கி மனமகோடு

நேசோ சேநகையன்.

**வா. முத்துக்குமாரசுவாமி செட்டி,**

(திருக்குறள் சொற்குறிப்பகராதிப் பதிப்பாசிரியர்

வா. மாணிக்கசாமி செட்டியார் குமாரன்.)

சிவமயம்

# சாற்றுக் கவிகள்

### வைத்தியமணி த. மு. கணேச பாரதியார் கூறியது.

முருகனையே நினைந்துநினைந் துருகிச சென்னி
முகிழ்த்திருகை யழலிழுதி னுருகி யன்பே
யுருவாகித திருப்புகழைப் பாடிப்பாடி
யுலகினது பெருந்துயர மொழியு மாறப்
பெருமாற்கே தன்மனத்தைக் கோயி லாகப்
பெரிதளித்த நற்புலவன் வைரக் கணபேர்
மருவுமரு ணாசலவே ளுயாபண பெல்லாம்
வளாகுரிசில் வன்னிகுலக கோமா னன்றே.

குருமணியாய்க் குமரனைதத னுளககோ யிற்கண்
கொண்டுருகித தடஙகணீா வார வாரப்
பெருகியவன் புடனிறைஞ்சி யனையான் றெயவப்
பேரருளாற் புலவனெனப பிறஙகு மேலோன்
தருவெனவுற் றவாகளெலா முவகை பூப்பத்
தருந்தணிகைச செவ்வேளைத தணவாக் காத
லரும்பவுயிா வருக்கப்பா மாலை பாடி
யரும்புகழும பெரும்பயனு மடைந்தான் மாதோ.

### ராவ்பகதூர வ. சு. செங்கல்வராய பிள்ளை M. A., கூறியது.

1. சுததி யடக்கம் தூயகுணம் துதைந்த சிறந்த ஒழுக்கத்தான்
எததி லாதான் வைரக்கண் என்ற அருணா சலப் பெயரான்
சத்தி வடிவேற் திருக்கரததுத தணிகை முருகன் திருவடிககே
பததி யுளததோ டுயிா வருக்கப் பாவின மாலை சூட்டினனே.

2. பாட்டி லுள்ள அடிகள் தொறும் பததி ரசமே மிக விளஙகக்
காட்டி யுள்ள அத்திறமை கந்த ரநளே ஆதலினல்
நாட்டி லுள்ளாா இந்நூலின் நயததை அறிநது தணிகேசர்
மாட்டி லன்பு குறையாமே வாசித தின்பம் அடைகுவரே.

### ஆரூடகணித தமிழ்ப் புலமை மதுரகவி ராஜசிங்கம் ஆறுமுக சாமியாா இயற்றிய அறுசீா ஆசிரிய விருத்தம்.

சீராருந் திருததணிகையுறு முருகன் திருமலாத்தாள் தினந்துதிக்கும்
பேராளன் வைரக்கண ணடியனுள மகிழ்ந்துமிக பெருமையுற்ற
சாருமுயிா வற்ககுண சிவரத்ன மணிமாலைச சாற்றியப்பின்
பேருலகி லினிபிறவா பேரின்ப முறவாழ்வன் பெரும்பாலென்றே.

ஓம்



# திருத்தணிகை ஸ்ரீ சிவசுப்பிரமணியப் பெருமான்

# சுகுண சிவரத்னமணி

# உயிர்வருக்கப் பாமாலை

---

### ஆபத்சகாய விநாயகர் காப்பு.

தேன்பொழியுஞ் சோலைத் திருததணிகை வேலவர்மேற்
பான்மொழிநோ பாமாலைப் பாடவே — வான்போற்
றானுமையாள மைந்த னுபத சகாயன்
கரிமுகவன் பொற்சரணம காப்பு.

(1) அகண்ட பரிபூரண சதானந்த யோகநிலை
யருளு மெய்க் குருநாதனே
அலைகட லுதித்திடும் பலகோடி யிளரவியு
மழகுபெறு முன தொளியினில
செகந்தொழுந் தாய்வள்ளி பசசைவடி வொளியினிற்
றிளைத்தாடு மயிலக ளெல்லாஞ்
செப்பரிய தெய்வானை காந்திகண் டன்னங்கள்
திகைத்துதன தினம தென்னும்
புகன்றிடற் கரியசுடர் வீசுமா ணிக்கமொடு
புகழ்வயிர மரகத மெனப
பொற்பிலகு தேவகுஞ் சரிவள்ளி மகிழ்கின்ற
பொழிகருணை சரவணபவா
சுகந்தரும் மெய்ஞ்ஞான சட்சுதீட் சையருள்
சுயஞ்சோதி ரூப மணியே
சுனைநீல மொட்டலர் திருத்தணிகை வெற்பிலொளிர்
சுகுண சிவ ரதனமணியே.

(2) ஆழிசூ ழுகிலமதி லெவருனை தொழாதவர்கள்
அரிபிரம ரமரர் முதலோர்
அஞ்சலித் திடவவர்கள் வெஞ்சிறை தவிர்த்துவிண்
ணரசாள வைத்த முருகா
ஊழின்வலி யால்மெலியும உன்மதத னேனுககு
முய்யவழி காட்டி ஞான
உயர்கலைக ளியாவையு முணர்நதிடும் படியெனக்
குபதேச மருள் புரிகுவாய்
ஆழிபெற நயனமிட் டரனையர்ச சிததசெய்
யவள்திகழு மார்பன் மருகா
அங்கயற் கண்ணுளை யிடபாகம் வைத்துமகிழ்
அண்ணலார் பெற்ற பாலா
சூழிளஞ் சோலைகுயில் கூவமயி லாடமான்
துள்ளவெழில கிள்ளை கொஞ்ச
சுனைநீல மொட்டலர் திருத்தணிகை வெற்பிலொளிர்
சுகுண சிவ ரத்னமணியே.

(3) இத்தரணி தனிலிலகு முத்தமிழின் விரகனே
எநதையே ஈசன் மைந்தா
இளையேன் படுந்துயர்க ளியாவுந களைநதெனக்
கிகபரசௌ பாக்ய மருள்வாய்
பத்தர்பணி வேலனே சத்தியருள் பாலனே
பரதமயி லூர் சீலனே
பாலாழி தனிலதுயிலு மாயோ னுளத்தெழுதி
பார்த்துக் களிக்கு மழகா
முத்துநவ ரத்னமணி மாலையணி மார்பனே
மோனவெளி யான குகனே
. முகிலனைய குழல்வள்ளி மாதுதெய் வானையிள
முலைநலந தோயு மழகா
சுத்ததிரு நீறுபுனை முத்தருள வாசனே
சுயஞ்சோதி ரூப மணியே
சுனைநீல மொட்டலர் திருத்தணிகை வெற்பிலொளிர்
சுகுண சிவ ரத்னமணியே.

(4) ஈரா றிரண்டுலக மியாவையு மிரட்சிக்கும்
ஏகம்பர் மகிழு முமையாள்
இளையகும ராகருணை பொழியுமவிழி யாமயிலி
லினிதேறி கடிது வநதென்
தீராத வலவினைக ளியாவையு மழிததனது
திருநடன காட்சி யருள்வாய்
திசைமுகத தவனைநற் பிரணவப பொருள்வினவி
சிரங்குட்டி சிறை வைததவா
தாரார் கடபபமலா தோளனே யோராறு
தண்மொளி ததுமபு வதனு
தடஙகையீ ராறுடைய செபபவள மேனியாய்
தநதினவென ருடு மயிலா
சூராதி சூரர்குல மாளவேல தொட்டசெஞ்
சுயஞ்சோதி ரூப மணியே
சுனைநீல மொட்டலர் திருததணிகை வெற்பிலொளிர்
சுகுண சிவ ரதனமணியே.

(5) உம்பர்விண் ணவர்முனிவர் செநதமிழ்ப புலவோர்க
ளோயாம லெநநேர முன
உபயதிரு மலரடியை பரவவருள் புரிகின்ற
ஓஙகார மயில் வாகனு
செம்பவள விதழமுத பைஙகொடிக குறவள்ளி
தேவகுஞ்சரி மணாளா
செப்பரிய நின்புகழை யுணராத நாயேன்
செழித்தோங்க அருள் புரிகுவாய்
பைம்புனல் மதிசசடையர் மனறலநிக ழும்வடது
பால தாழவே சிவன்றென
பால்சமம தாகவே பரமன்விடை பெற்றமர்தண்
பொதிகைமலை மா முனிக்குத
தொம்பதந ததபத மசிபத முறைததிட்ட
சுயஞசோதி ரூப மணியே
சுனைநீல மொட்டலர் திருததணிகை வெறபிலொளிர்
சுகுண சிவ ரத்னமணியே.

(6) ஊரா சிகிக்கணூற் றுறுபடை வீடதனி
லோங்கிவிளை யாடு முருகா
உன்றனிரு பதமலரை நாடுமடி யேன்றனக
துன்னை மறவாத அன்பும
காரான மேனியன் மார்பவள் கடாக்ஷமும
கலைமகள் கடாக்ஷம துடன்
கனகநிற வேலுமெழில் சேவல்மயி லோடுமுன்
கருணை பொழி விழிபார்வையும
வாராத மெய்ஞ்ஞான நிட்டையு மளிததடிமை
வாழவுமிக கருணைபுரிவாய்
வண்டார மலர்கருகுழலி வள்ளிதெய் வானையொடு
வண்ணமயி லேறி வருவாய்
சூர்மாவை வென்றதிண் டோளனே வீரனே
சுயஞ்சோதி ரூப மணியே
சுனைநீல மொட்டலர் திருததணிகை வெறபிலொளிர்
சுகுண சிவ ரதனமணியே.

(7) எந்தையே யிக்கலி யுகத்திலே நின்னையே
எண்டிசை யெலாம புகழ்கிறார்
ஏழையேன நினபுகழை ஏததிடவு மறிகிலேன்
இனிமை யொடு பாடவறியேன்
கநதமிகு நின்மேனி காணும்வழி யறிகிலேன்
கருதிவழி படவு மறியேன்
கசடனே னுய்யநின் கழலன்றி வேறுதுணை
கருதிலேன், ஆதலாலென்
சிநதைதனில் குடிகொண்டு மறவாது நினனையே
சிநதிக்குமன மருளியுஞ்
செகததிலுன வண்புகழை யோதியே உய்யவுஞ
சிவஞான சிததி யருள்வாய்
சுநதரத தோகைமயி லேறிவிளை யாடிவருஞ்
சுயஞ்சோதி ரூப மணியே
சுனைநீல மொட்டலர் திருததணிகை வெற்பிலொளிர்
சுகுண சிவ ரதனமணியே.

(8) ஏடுமல ருற்றமண மாலையணி மார்பனே
எங்கும்நிறை வான பரனே
எமனுடைய பாசமென் மீதினில் விழாதமுன்
னிருசக்தி மார்க ளுடனே
ஆடுமயி லேறிவந் தடியேனை யஞ்சலென்
றருள்புரிய வேணுமப்பா
அதிமதுர கனியினு மினித்திடுமெ னின்பமே
அருட்பெருஞ் சோதி மயமே
பாடுமடி யார்களுள மேவிநட மிடுகின்ற
பன்னிரு புயா சலததோய்
பளிங்கெனவி ளங்குவிடை யேறிமிளிர் சடைமுடியில்
படவரவு மதியு நதியுஞ்
சூடுமிறை மைநதனே சூரசம் மாரனே
சுயஞ்சோதி ரூப மணியே
சுனைநீல மொட்டலா திருத்தணிகை வெற்பிலொளிர்
சுகுண சிவ ரத்னமணியே.

(9) ஐயநின் னுமங்கள் யாதிலொன் றாகிலும்
அன்பினோ டோதுபவர்கட்
கங்கே வெளிப்படுமென் மெய்ஞ்ஞான தெய்வமே
ஆனநத ரூப மயமே
வெய்யசுரர் பொடியாக விடையவர்கண் ணுதல்வந்து
விண்ணவர்கள் சிறை மீட்டவா
வெய்யதுய ரேபுரி பவக்கட லொழித்தடிமை
மேன்மை பெறவே யருளுவாய்
வையக மெலாநதொழும் வாரணத் துவஜனே
வஜ்ரவடிவே லாயுதா
வனசமயி லிறைவன்மகிழ் மருகனே வேடர்குல
வஞ்சியை மணநத தோளா
துய்யனே நீறணியு மெய்யனே ஐயனே
சுயஞ்சோதி ரூப மணியே
சுனைநீல மொட்டலர் திருத்தணிகை வெற்பிலொளிர்
சுகுண சிவ ரத்னமணியே.

(10) ஒருமையுட னினது திரு மலரடி வணங்குவோர்
ஓங்கியே வாழ்கின்றனர்
உள்ளன் பிலாதகடை யேனையுன் பாதமலர்
உணரும்வழி காட்டியருள்வாய்
தருவதில் நினக்குநிக ரில்லையென் றெண்ணியே
தஞ்சமென் றுனையடைநதேன்
தண்டுளப மாலையணி மால்மருக னேகுகா
தாரணிபுகழ் குரு நாதனே
அருணகிரி பாட்டிற் குவநதருள் சுரநதவா
அற்புத சிரோ ரத்னமே
அருந்தினை புனத்திலகு குறவஞ்சி யுளமறிந
தருள்வடிவு காட்டியாண்டாய்
சுருதி பணிபாதனே தொண்டர்மகிழ் நாதனே
சுயஞ்சோதி ரூப மணியே
சுனைநீல மொட்டலர் திருததணிகை வெற்பிலொளிர்
சுகுண சிவ ரதனமணியே.

(11) ஓவியத் தெழுதொணா வுருவனே அருவனே
ஒளிபெருங கருணை வடிவே
உலகிற் சிறநதவைக ளியாதினும் வல்லனென்
றோங்கநின் னருள் புரிகுவாய்
ஆவிக கருங்கலம தானஎன் செம்மலே
அகததுள் ளொளிர்கின்ற சிவமே
அரனு ருளங்குளிர மநதிர முரைத்தவா
அறுவர்தரு பாலுண்டவா
காவியொடு நீறபுனை கநதனே கலியினிற்
கண்கண்ட தெய்வம் நீயே
கனவிலுமு னுபயபத மறவாத சிநதையருள்
கரிமுகற் கிளையவேளே
தூவிமலர் தொண்டர்பணி தூயபொற் பாதனே
சுயஞ்சோதி ரூப மணியே
சுனைநீல மொட்டலர் திருத்தணிகை வெற்பிலொளிர்
சுகுண சிவ ரத்னமணியே.

(12) ஔவையை மறுக்கஞ்செய் யாறுமுக வள்ளலே
அடியனேன் நின்னருளினால்
ஆக்கியப் பாடல்களி லுளகுற்ற மியாவையும்
அன்புடன் பொறுத தருளுவாய்
செவ்வதர முத்துநகை யிநதுவத னத்தழகு
சேலனைய விழியினழகுஞ்
செறிநதசிற் றிடைமலர்க் கொடிவள்ளி தெய்வானை
திருமார் பணைநத தோளா
கௌரிகை வேலகொண்டு கடுஞ்சூர் தடிநதவா
கமலநய னத்தன் மருகா
கருவிகர ணாதிகளொ டிநதிரிய மியாவுங்
களைநதசீர் மெய்ஞ்ஞானிகள்
ஔவுநற் கனியமுத மேயெனைக் காத்தருள்
சுயஞ்சோதி ரூப மணியே
சுனைநீல மொட்டலர் திருததணிகை வெற்பிலொளிர்
சுகுண சிவ ரத்னமணியே.

---

இதுவும் ஷை முநகர் ஸ்தோத்திர முத்தகம்

அஃதிதுவு தென்னப படாதருவ வுருவமாய்
அருட்பெருஞ் சோதிமயமாய
அவனியெங குநதழைத் தறங்கள்பல வோங்கவே
ஆறுமுக மாகிவநத
முக்கணன் மைந்தனே முத்துக் குமாரனே
முடிவிலா ஆனநதனே
மூதறிஞர் புகழ்பாட நடனமா தர்களாட
முழுஙக வொலி நாதகீதம
மிக்கபுகழ் விண்ணவாகள் மலர்தூவ தாதிமார்
வெண்சா மரஙகள்வீச
மெல்லியர்க ளிருவரொடு புள்ளிமயில மீதினில்
விளஙகிவாழ் கின்ற முருகா
ஒ்சாக்கவடி வேலனே யென்றுமெனை ரட்சிக்குஞ்
சுயஞ்சோதி ரூப மணியே
சுனைநீல மொட்டலர் திருததணிகை வெற்பிலொளிர்
சுகுண சிவ ரத்னமணியே.

---

சீர்பெருங் கருணை பொஙகுந் திருமுக மாறும் வாழி
போாமிகு சூரை வென்ற புயங்களீ ராறும் வாழி
பார்புகழ் தேயவ யானை பகாவளளி யேந்தாய் வாழி
வாரண மஞ்ஞை சேவ்வேல் வாழிநற் றணிகை வாழி.

சுகுண சிவரதனமணி உயிர்வருக்கப் பாமாலை முற்றிற்று.

இப்புத்தகம் கிடைக்கும் இடம்:-

தே. ப. மெய்ஞ்ஞான நாயனார்,

நெ. 32, செங்கழுநீர் பிள்ளையார் கோவில வீதி,

ஜி. டி. மதராஸ்.

திருவாளர்:

வ. சு. செங்கல்வராயப் பிள்ளை,

M. A. அவர்கள்,

திருத்தணி.